# உறுதி மொழி

எனக்குத் தெரியும் தண்ணீர் உயிர், உயிரின் மூலமும் ஆதாரமும் என்று

**“சொர்கத்திலிருந்து ஆசிர்வாதம் போல் விழுகிறது,**
**நமது நீராதாரங்களைப் புதுப்பித்துச் சுத்திகரிக்கிறது“**
உலகின் உயிரை நீடித்திருக்கச் செய்ய தனது பயணத்தில் மகிழ்ச்சியுடன் ஓடுகிறது.
பிறகு நிறைவை உணர்கிறது, ஆவியாகிறது, தனது பயணத்தை மீண்டும் துவங்குவதற்கு

எனது உடல் பெரும்பாலும் தண்ணீரால் உருவானது என்று எனக்குத் தெரியும்
அந்த சுத்தமான தண்ணீர் என் சுகாதாரத்திற்கு முக்கியமானது.
இயற்கையின் மிகவும் விலை மதிப்புள்ள ஈடு இணையற்ற பரிசு
நான் எப்போதும் தண்ணீரைச் செல்வமெனச் சேமித்துப் பாதுகாப்பேன்.

தண்ணீரை நான் நேசத்தோடும் பரிவோடும் அணுகுவேன். ஒருபோதும் வீணாக்கவோ,
மாசுபடுத்தவோ அல்லது அதனுடைய இடத்தை ஆக்கிரமிக்கவோ மாட்டேன்.
நான் ஒருபோதும் அதைத் தவறாகப் பயன்படுத்தமாட்டேன். மற்றவர்களும் அப்படி
செய்வதை அனுமதிக்க மாட்டேன். தண்ணீரைச் சுத்தமாக வைத்திருக்கவும், அதிகளவில்
பாதுகாப்பாக வைத்திருக்கவும் முயற்சிப்பேன் என்று உறுதியளிக்கிறேன்.

**“அற்புதமான நீருக்கு நன்றி!”**